

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், அனைத்துத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று முன்தினம் (12.07.2023) நரிகுறவர் இன மக்களுக்கு இலவச வீட்டு மனைபட்டா பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கே.எம்.சரயு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ், தே.மதியழகன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.ராஜேஸ்வரி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.மணிமேகலை நாகராஜ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## திருப்பூர் தெற்கு மாவட்டம்
## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் முடிவு
### தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ.இராமலிங்கம், அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவர் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால்; திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2023, ஜூலை 12 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு திரு.என்.ராமசாமி அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,**

**திரு. என்.ராமசாமி, எண்.998, கணியூர் மெயின் ரோடு,**

**ஜோத்தம்பட்டி அஞ்சல், மடத்துக்குளம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் 642 203. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12.07.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### சென்னையில் அக். 8-ல் 'சைக்ளோதான்' போட்டி நடைபெறும்!
# விளையாட்டுக்கான உலகளாவிய இடமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம்!
## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, ஜீலை 14 -

சென்னையில் 2023 அக்டோபர் 8ஆம் தேதி சைக்ளோதான் (Cyclothon) நடைபெற உள்ளது என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.07.2023) சென்னை தாஜ் கன்னிமரா ஹோட்டலில் நடைபெற்ற சைக்ளோதான் அறிமுகக் கூட்டத்தில் தெரிவித்தார்.

சென்னையில் 2023 அக்டோபர் 8ம் தேதி சைக்ளோதான் (Cyclothon) நடைபெற உள்ளது. ஹெச். சி. எல். நிறுவனம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து சைக்கிளிங் போட்டியினை நடத்த உள்ளது. இதன் அறிமுக கூட்டத்தில் சைக்ளோதான் டிசர்ட் (T.Shirt)யினை அறிமுகப்படுத்திய பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :

ஹெச்.சி.எல். சைக்ளோதான் (HCL Cylcothon) 2023 அக்டோபர் 8 அன்று சென்னையில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநில வரலாற்றிலேயே முதன்முறையாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் சென்னையில் இந்த போட்டி நடத்தப்படுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் விளையாட்டுத் தலைநகராக தமிழ்நாடு உருவாக வேண்டும் என்பதில் நமது முதலமைச்சர் முதல் நாளிலிருந்தே மிகத் தெளிவாகக் கூறி வருகிறார். நமது முதல்வரின் திறமையான தலைமையின் கீழ், தமிழ்நாட்டை விளையாட்டு சக்தியாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

வரலாற்று ரீதியாக, பல விளையாட்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து உலகத் தரம் வாய்ந்த தொழில்முறை விளையாட்டு வீரர்களை உருவாக்கும் செழுமையான பாரம்பரியம் எங்களிடம் உள்ளது. மேலும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளை பொறாமைப்படும் வகையில் ஒழுங்கமைப்பதன் மூலம் விளையாட்டு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஒரு முன்னோடி என்பதை நிரூபித்துள்ளது.

உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமும், உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு நிகழ்வுகளை மாநிலத்திற்கு கொண்டு வருவதன் மூலமும், விளையாட்டுக்கான உலகளாவிய இடமாக நம்மை நிலைநிறுத்துவது நமது பார்வை.

செஸ் ஒலிம்பியாட் போட்டியை தமிழ்நாடு வெற்றிகரமாக நடத்தியது. அந்த மதிப்புமிக்க போட்டியை நான்கு மாதங்களுக்குள் நாங்கள் ஏற்பாடு செய்தோம், அதற்கு வழக்கமாக ஒரு வருடம் ஆகும்.

சமீபத்தில், ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 சென்னையில் ரூ.2 கோடி செலவில் நடத்தினோம்.

2023 ஆகஸ்ட் மாதம் எங்கள் துறைக்கு முக்கியமான மாதமாக இருக்கும். ஆசிய கோப்பை ஹாக்கி 2023 ஆகஸ்டு 3 முதல் 11 வரை 18 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் சென்னையில் நடைபெறவுள்ளது. 15 ஆண்டுகளுக்குப் பிறகு, இங்கு நடைபெறும் முதல் சர்வதேச ஹாக்கிப் போட்டி இதுவாகும்.

நாங்கள் ஆகஸ்ட் 14 முதல் 20 வரை மகாபலிபுரத்தில் உலக சர்ஃபிங் லீக்கை நடத்தவுள்ளோம். இது இந்தியாவின் முதல் சர்வதேச சர்ஃபிங் நிகழ்வு ஆகும். இந்த விளையாட்டுக்காக மாநிலம் ரூ.2.67 கோடியை அனுமதித்துள்ளது.

**உலகளாவிய விளையாட்டு நகரம்!**

மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல தமிழ்நாடு விளையாட்டுக் கொள்கையை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.

2023-24 பட்ஜெட்டில் சென்னை மேம்பாட்டிற்காக அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகளில் அதிநவீன "உலகளாவிய விளையாட்டு நகரத்தை" உருவாக்குவதற்கான உள்கட்டமைப்பு திட்டத்தை அறிவித்துள்ளோம்.

மைதான வசதிகள் உள்ள அனைத்து தொகுதிகளிலும் மினிஸ்டேடியங்கள் ஏற்படுத்தப்படும்.

முதன்முறையாக, பாராவிளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், ஆறு மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் பாராஸ்போர்ட்ஸ் அரங்கையும் அமைக்கவுள்ளோம். மாநிலத்தில் பாரா விளையாட்டுகளை ஊக்குவிக்கும் முதல் முதலீடு இதுவாகும்.

நமது முதலமைச்சர் அவர்கள் தகுதியான வீரர்களுக்கு நிதியுதவி வழங்குவதோடு, தமிழ்நாட்டில் விளையாட்டுக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைத்" தொடங்கியுள்ளார். எங்களின் பணியின் ஒரு பகுதியாக, எச்.சி.எல் உடன் இணைந்து அரசாங்கம் இந்த சைக்ளோதான் நிகழ்வை சென்னையில் நடத்துகிறது. கார்பன் கால்தடத்தைக் குறைப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, உங்கள் மன மற்றும் உடல் வலிமையைப் பெருக்கும் நிகழ்வில் பங்கேற்குமாறு அனைவரையும் அழைக்கிறேன்.

முதலமைச்சர் அவர்களே சைக்கிள் ஓட்டுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். சென்னைவாசிகள் அடிக்கடி கிழக்கு கடற்கரை சாலையில் அவர் சைக்கிளில் செல்லும் போது அவரை நேரில் பார்த்துள்ளனர்.

**சிறப்பு பாதை!**

தமிழ்நாடு அரசு, இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு கடற்கரை சாலையில் சைக்கிள் ஓட்டுபவர்களுக்காக ஒரு சிறப்பு பாதையை அர்ப்பணித்துள்ளது.

சைக்ளோதான் மூன்று பிரிவுகளின் கீழ் நடத்தப்படும். முதல் வகை தொழில்முறை உயரடுக்கு. சாலைப் பந்தயமாக 55 கிலோ மீட்டர்கள் சவாரி செய்ய வேண்டிய இந்திய சைக்கிள் ஓட்டுதல் கூட்டமைப்பு சான்றளிக்கப்பட்ட விளையாட்டு வீரர்களுக்காக இது சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அமெச்சூர் குழுவின் கீழ் MTB சாலைப் பந்தயம் எனப்படும் மற்றொரு வகை உள்ளது. இது 25 கிலோமீட்டர் பயணமாக இருக்கும்.

பொதுமக்கள் மற்றும் சைக்கிள் ஓட்டும் ஆர்வலர்களுக்காக பொழுதுபோக்கிற்காக பங்கேற்க விரும்புவோர் 15 கி.மீ மூன்றாவது பிரிவின் கீழ் பங்கேற்கலாம்.

இந்நிகழ்வில் 5000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சைக்ளோதான் நடத்துவதற்கு ஹெச்.சி.எல்.சென்னையைத் தேர்ந்தெடுத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சைக்ளோத்தானை மாபெரும் வெற்றியடையச் செய்யவும், தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியாக இருக்கவும் இங்கு வரும் அனைவரையும் அழைக்கிறேன், கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹெச்.சி.எல். கார்ப்பரேஷன் தலைவர் (வியூகம்) சுந்தர மகாலிங்கம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்
## மாவட்ட துணைச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல் முடிவு!
### தலைமைக் கழக அறிவிப்பு

**"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருநெல்வேலி மத்திய மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளராக (மகளிர்) தேர்ந்தெடுக்கப்பட்ட விஜிலா சத்தியானந்த் மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டதால்,கழக சட்ட திட்ட விதிகளின்படி, ஒருவருக்கு ஒரு பொறுப்பு வகிக்க வேண்டுமென்ற அடிப்படையில், அவர் வகித்து வந்த மாவட்ட துணைச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால்; திருநெல்வேலி மத்திய மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (மகளிர்) பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2023, ஜூலை 12 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதை யொட்டி;**

**திருநெல்வேலி மத்திய மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (மகளிர்) பொறுப்புக்கு திருமதி சி.கிரிஜா மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,**

**திருநெல்வேலி மத்திய மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளராக (மகளிர்) திருமதி. சி. கிரிஜா,**

**எண். 362பி, சர்ச் தெரு, சங்கர் நகர்,**

**திருநெல்வேலி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12.07.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் கடந்த 2 ஆண்டுகளில்
# கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகை ரூ. 78 ஆயிரம் கோடியாக உயர்வு!
## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

*சென்னை,ஜூலை.14-*

*கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (12.07.2023) தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் குன்றத்தூர் கிளையில், வங்கியின் செயல்பாடுகளை துவக்கி வைத்து ரூ.2 கோடியே 13 லட்சத்து 81 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.*

*இந்நிகழ்வில் கூட்டுற வுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசும்போது:*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் 11.07.2023 அன்று தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் தாம்பரம் கிழக்கு, தாம்பரம் மேற்கு, குன்றத்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் நான்கு புதிய வங்கிக் கிளையினை திறந்து வைத்தார்கள்.*

*அதன்தொடர்ச்சியாக, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் குன்றத்தூர் கிளையினை நேரில் பார்வையிட்டு, வங்கியின் செயல்பாடுகளை துவக்கி வைத்து கடனுதவிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.*

*தமிழ்நாட்டில், வங்கிசேவையாக இருக்கட்டும், கூட்டுறவு அமைப்பாக இருக்கட்டும் சிறப்பான முறையில் செயல்பட்டு, நாம் இந்தியாவிலேயே முன்னோடியாக திகழ்கிறோம். இந்த வங்கி சேவையினை பொதுமக்கள்*



*பயன்படுத்தி உங்களுக்காக நாங்கள், எங்களுக்காக நீங்கள் என்ற அடிப்படையில் எங்களை ஊக்கப்படுத்தி அதன்மூலம் நீங்கள் பயன்பெறலாம். 100 ஆண்டுகளுக்கும் மேலான வங்கி சேவையில் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது. லாபநோக்க மற்ற முறையில் இந்த வங்கிச் சேவை தொடர்ந்து வருகிறது.*

*இந்த வங்கிச் சேவையின் மூலம் சிறு, குறு விவசாயி கள், சிறு வணிகர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் வீட்டுக்கடன், நகைக்கடன், தொழில் தொடங்க கடன் போன்ற கடனுதவி குறைந்த வட்டியில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வங்கி சேவையினை பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.*

*மேலும், தமிழ்நாட்டில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.51 ஆயிரம் கோடியாக இருந்த வைப்புத்தொகை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி அமைத்த பின்பு ரூ.78 ஆயிரம் கோடியாக வைப்புத்தொகை உயர்ந்துள்ளது. இது பெரும் வளர்ச்சியாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.*

*தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி வணிக வங்கிகளுக்கு நிகராக துரிதப் பணப்பரிமாற்றச் சேவைகளான RTGS, NEFT, IMPS, UPI இணையவழி வங்கிச்சேவை, கைபேசி வழிச்சேவை தனியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் என அனைத்து சேவையினையும் கணினி வழியாக வழங்கிவருகிறது. இதனை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெற கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.*

*அதனைத் தொடர்ந்து, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் ஒரு நபருக்கு ரூ.50 லட்சத்துக்கான வீட்டு கடன் உதவியினையும், 18 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1 கோடியே 42 லட்சத்து 56 ஆயிரம் மதிப்பிலான மகளிர் சுய உதவிக்குழு கடனினையும், ஒரு நபருக்கு ரூ.1 லட்சம் மதிப்பிலான தனிநபர் கடன் உதவியினையும், 39 நபருக்கு ரூ.19 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான சிறு வணிக கடனுதவியினையும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.75 ஆயிரம் மதிப்பிலான மாற்றுத் திறனாளி கடனுதவியினையும் ஆக மொத்தம் 62 நபர்களுக்கு ரூ.2 கோடியே 13 லட்சத்து 81 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன். , தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் , கூடுதல் பதிவாளர்கள் டாக்டர்.என்.வில்வசேகரன், சிவமலர், சுப்பிரமணி யன், திருமதி.மிருணாளினி, டாக்டர்.டி.அமலதாஸ், எம்.முருகன், மண்டல இணைப்பதிவாளர் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு பொது மேலாளர் திருமதி.இரா.வே. காவேரி உட்பட கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

## சில வரிச் செய்திகள்

### பஞ்சாபில் வெள்ளம்:
## 200க்கும் மேற்பட்டோர் வெளியேற்றம்!



*சண்டிகர், ஜூலை 14-*

*பஞ்சாபின் சுல்தான்பூர் லோதி நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து 200க்கும் மேற்பட்டோரை ராணுவம் வெளியேற்றியுள்ளது.*

*லோதி நகரத்தில் கடந்த இரண்டு நாள்களாக பெய்துவரும் கனமழையால் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. வெள்ளம் சூழ்ந்த பகுதியில் உள்ளவர்களை வெளியேற்றும் பணியில் ராணுவம் மற்றும் என்டிஆர்எப் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.*

*இதுவரை 223 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் மற்றும் பிற தேவைப்படும் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளது.*

### தமிழ்நாட்டுக்கு
## ரூ.450 கோடி பேரிடர் நிவாரண நிதி ஒதுக்கீடு!
### ஒன்றிய அரசு அறிவிப்பு!



*புதுடெல்லி ஜூலை 14-*

*தமிழ்நாட்டுக்கு ரூ.450 கோடியை பேரிடர் நிவாரண நிதியாக ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது . 22 மாநிலங்களுக்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.7,532 கோடியை ஒன்றிய அரசு விடுவித்துள்ளது. அதிகபட்சமாக மராட்டிய மாநிலத்துக்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.1,420.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

### தக்காளி விற்பனை மூலம் ஒரே நாளில்
## ரூ.38 லட்சம் வருவாய் ஈட்டிய கர்நாடக விவசாயி!



*பெங்களூரு, ஜூலை 14-*

*கர்நாடகத்தைச் சேர்ந்த விவசாயக் குடும்பம் ஒன்று தக்காளி விற்பனை மூலம் ஒரே நாளில் ரூ.38 லட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. கோலார் மாவட்டம் பெத்த மங்களாவைச் சேர்ந்த விவசாயி பிரபாகர் குப்தா குடும்பம் 40 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறது. பிரபாகர் குப்தா மற்றும் அவரது சகோதரர்களுக்கு சொந்தமாக பெத்த மங்களாவில் 40 ஏக்கர் விவசாயம் நிலம் உள்ளது. 40 ஏக்கரில் பிரபாகர் குப்தா குடும்பத்தினர் சாகுபடி செய்து செவ்வாய்க்கிழமை 2,000 பெட்டி தக்காளி அறுவடை செய்துள்ளனர்.*

### ஆசியக்கோப்பை கிரிக்கெட்:
## இந்திய அணி பாகிஸ்தான் செல்லாது!
### பிசிசிஐ அறிவிப்பு!




*மும்பை, ஜூலை 14-*

*ஆசியக்கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இந்திய அணி பாகிஸ்தான் செல்லாது என பிசிசிஐ அறிவித்துள்ளது. இந்தியா - பாகிஸ்தான் மோதும் போட்டிகள் இலங்கையில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இதையடுத்து இந்திய அணி பாகிஸ்தான் செல்வதில் பல்வேறு சிக்கல் நீடித்து வரும் காரணமாக ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடருக்காக இந்திய அணி பாகிஸ்தான் செல்லாது என்ற கருத்தை பிசிசிஐ முன் வைத்து வந்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கம், அக்டோபர் மாதம் இந்தியாவில் நடைபெற உள்ள உலகக்கோப்பை தொடரில் பாகிஸ்தான் அணி பங்கேற்காது என கூறியது.*

*இந்நிலையில் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடருக்காக இந்திய அணி பாகிஸ்தான் செல்லாது என்பதை பிசிசிஐ நிர்வாகி அருண் துமல் உறுதிப்படுத்தியுள்ளார்.*

### மாமல்லபுரம் புராதனச் சின்னங்களை
## மின்னொளியில் இரவு 9 மணி வரை பார்க்கலாம்!



*மாமல்லபுரம், ஜூலை 14-*

*மாமல்லபுரத்தில் உள்ள புராதன சின்னங்களான கடற்கரை கோயில், ஐந்து ரதம், அர்சுனன் தபசு, வெண்ணெய் உருண்டை பாறை, பகுதிகளை இரவிலும் பார்த்து ரசிப்பதற்காக மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டது. இரவு 9 மணிவரை சுற்றுலா பயணிகள் உள்ளே சென்று பார்க்க அனுமதியும் வழங்கப்பட்டது. பின்னர் ஓரிரு வாரத்தில் பராமரிப்பு இல்லாமல், பாதுகாப்பு கருதி நிறுத்தப்பட்டது.*

*இந்நிலையில், வரும் 15ஆம் தேதியில் இருந்து இரவு 9 மணி வரை அலங்கார மின்னொளியுடன், புராதன சின்னங்கள் திறந்திருக்கும் என தொல்லியல்துறை தெரிவித்துள்ளது. இதேபோல் கங்கைகொண்ட சோழபுரம், தஞ்சாவூர், சிவகங்கை, திருச்சி மற்றும் வெளி மாநிலம் என 14 இடங்களுக்கு 9 மணிவரை அனுமதி வழங்கியுள்ளது.*

### டெல்லியில் வெள்ளம்
## அமலுக்கு வந்தது 144 தடை!

*புதுடெல்லி, ஜூலை 14-*

*டெல்லியை பொறுத்தவரை கடந்த 67 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கனமழை பெய்து வரும் நிலையில், யமுனை ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, டெல்லியில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் டெல்லி போலீசார் 144 தடை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.*